செ. வெ. எண் : 524 தொழில்நுட்பக் கல்வித் துறை 4.7.08

## செய்திக் குறிப்பு

**2008–2009 கல்வியாண்டில் பொறியியல் பட்டப்படிப்பு சேர்க்கைக்காக சென்னை, அண்ணா பல்கலைக்கழகத்தில் நடைபெறும் கலந்தாய்வில் பங்கேற்கவரும் மாணவ மாணவியருக்கு பேருந்து பயணக் கட்டணச் சலுகை வழங்குவது – அரசாணை வெளியீடு**

2008–2008 கல்வியாண்டின் பொறியியல் பட்டப்படிப்பு மாணவர் சேர்க்கைக்கான சென்னை, அண்ணா பல்கலைக்கழகத்தில் கலந்தாய்வில் கலந்து கொள்ளும் பொருட்டு, சென்னை, அண்ணா பல்கலைக்கழகத்திற்கு வெளியூரிலிருந்து வருகை தரும் மாணவர் மற்றும் அவருடன் உதவிக்காக வரும் ஒரு நபருக்கு அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளில் பயணக் கட்டணச் சலுகை கடந்த ஆண்டு வழங்கப்பட்டதைப் போன்றே நடப்பு 2008–2009 கல்வியாண்டிலும் வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. அதன்படி, அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளில் கலந்தாய்விற்கு வரும் மாணவர் மற்றும் ஒரு நபர் 50 சதவிகிதம் இரு வழி பயணக் கட்டணச் சலுகையினைப் பெறலாம். அரசுப் பேருந்துகளின் மூலம் கலந்தாய்வில் கலந்து கொள்ள வரும் மாணவர்கள் அனைவரும் இச்சலுகையினை பயன்படுத்திக் கொள்ளுமாறு இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி கலந்தாய்விற்கான அழைப்புக் கடிதம் (Counselling Call letter) ஒவ்வொரு மாணவருக்கும் அவர் கலந்து கொள்ளும் நாள், தேதி மற்றும் நேரம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு சென்னை, அண்ணா பல்கலைக்கழகத்தால் அனுப்பப்பட்டு வருகிறது. இக்கலந்தாய்வில் கலந்து கொள்ள வேண்டி பயணம் மேற்கொள்ளவிருக்கும் மாணவர்கள் இந்த அழைப்புக் கடிதத்தின் இரண்டு ஒளிநகல்களை (Xerox copy) எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும். அதில் ஒன்றினை, அரசுப் பேருந்து பயணச் சீட்டு முன்பதிவு செய்யும் அலுவலரிடமோ அல்லது பயணம் மேற்கொள்ளும்போது பேருந்து நடத்துனரிடமோ அளிக்க வேண்டும். ஒளி நகலைப் பெற்றுக் கொண்ட அலுவலர் அல்லது நடத்துனர் கலந்தாய்விற்கான அசல் அழைப்புக்கடிதத்தின் (Original Counselling Call letter) முன்பக்கத்தில் "50 சதவிகித பயணக் கட்டணச் சலுகை அளிக்கப்பட்டது" என்று சான்று அளித்த பின்பு, தக்க பயணச் சீட்டுகளை பயணம் மேற்கொள்ளும் மாணவர்களுக்கு வழங்குவர். அதே போன்று கலந்தாய்வு முடிந்த பின்னர் சென்னையிலிருந்து அவர்களது சொந்த ஊருக்கு பயணம் மேற்கொள்ளும்போதும் அழைப்புக் கடிதத்தின் இரண்டாவது ஒளி நகலைப் பயன்படுத்தி மேற்கூறிய நடைமுறைகளை பின்பற்றி 50 சதவிகித பயணக் கட்டணச் சலுகை பெற்று பயனடையலாம்.

(ஒம்) இரா. சிவகுமார், இ.ஆ.ப.
தொழில்நுட்பக் கல்வி ஆணையர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9